THE WORD OF CHRIST®

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

டிசம்பர்
2004

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 5 கனி 1

## ஆசிரியர் கடிதம்

இவ்வருடத்தின் இறுதிக்கு வந்துவிட்டோம் என்பதை நாம் நன்கு அறிவோம். அடுத்தவருடத்தின் திட்டங்கள் பல உங்களுக்குள் இருக்கும், அதற்கு முன் கர்த்தர் செய்த நன்மைகளை நினைவுபடுத்தி தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள். உங்களுக்கு உள்ளவைகள் போதுமென்று எண்ணி கர்த்தருக்குள் வளருங்கள். கர்த்தர் உங்கள் காரியங்களை வாய்க்கச்செய்வாராக! புதுவருடத்தில் 'ஒரே வழி' பாடத்தை உங்கள் பகுதியில் உள்ள திருச்சபையின் மூலம் கொடுக்க விரும்புகிறோம் விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

அன்புடன் ஆசிரியர்.

## இதழின் உள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. ஆசிரியருரை | | 1 |
| 2. இயேசுகிறிஸ்து | ஜே.சி.சோட் | 5 |
| 3. தேவன்? | பெட்டி சோட் | 9 |
| 4. வேதாகம சபை | ஜே.சி.சோட் | 11 |
| 5. எது அறிவுடமை? | சாலோ | 19 |
| 6. சந்திப்போம்! சிந்திப்போம்! | எபிநேசர் | 21 |
| 7. நற்செய்தி (சிறுவர் பகுதி) | ஆசிரியர் | 23 |
| 8. சாகிறவனுடைய சாவை கர்த்தர் விரும்புகிறதில்லை | | 17 |


## வேத அறிவுப்போட்டி எண் 51 -ன் விடைகள்

1. அந்திரேயா -யோவா.1:40
2. ஏசா -ஆதி.27:38
3. பவுல், தீமோத்தேயு -2தீமோ3:12
4. சவுல், தாவீதை -1சாமு.24:17
5. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து -கலா.6:2
6. சாத்தான் -யோபு2:4
7. தேவனுடைய நியமத்திற்கு -ரோம.13:2
8. ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் -பிர.2:26
9. அக்கினிக்கடலிலே -வெளி.20:15
10. நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் -தானி.5:27

## ஆன்மீக ஆலோசனை

"அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே.4:30)

**கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

*மரம் - 5* *டிசம்பர் 2004* *கனி - 1*


**ஆசிரியருரை**

## திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்

## Desire the sincere milk of the word



அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும்போது "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1பேது.2:3) என்கிறான். நாம் ஆவிக்குரிய வளர்ச்சியடைய வேண்டுமானால் ஆவிக்குரிய வசனங்களைக்கேட்டு, ஆவியில் பெலப்படவேண்டும். நம்முடைய சுய ஞானத்தினாலோ, சுய பக்தியினாலோ அல்லது சுய பெலத்தினாலோ வளருவோமேயானால் நாம் ஆவிக்குரியவர்களல்ல மாம்சத்துக்குரியவர்களே. திருவசனத்தில் வளர குழந்தைகளைப்போல களங்கமில்லாத ஞானப்பாலாகிய வசனத்தின்மேல் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

**வேதமே வெளிச்சம்:**

"கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி" (நீதி.6:23). வேதாகமம் இருள் உள்ள ஸ்தலத்தில் வெளிச்சம் கொடுக்கிற விளக்கைப்போன்று உள்ளது. நம்முடைய வாழ்க்கையில் உள்ள இருளை அகற்றி வெளிச்சத்தை கொடுக்கிறது. வேதாகமத்தை பெற்றுக்கொண்டவர்கள் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டவர்கள். ஆகையால், "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:14-16) என்றார் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. நாம் மலையில் இருக்கிற பட்டணத்தைப்போலவும், விளக்குத்தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்கைப்போலவும் நம்முடைய நற்கிரியைகள் மூலமாக வெளிச்சம் கொடுக்க

வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் திருவசனத்தில் வாஞ்சையாயிருப்போமானால் வேதம் கொடுக்கிற வெளிச்சத்தைப் பெற்று வெளிச்சம் கொடுக்கிறவர்களாயிருப்போம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்து கிறவர்களாகவுமிருக்கின்றனர். குருடன் ஒரு குருடனை வழிநடத்த முடியாது. அதுபோல வேதாகமம் இல்லாமல் ஒருவன் ஒருவனை வழிநடத்த முடியாது. "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்"(1பேது.4:11) என்ற வசனத்தின்படி, வேதாகமம் இல்லாமல் இருளுள்ள ஸ்தலத்தில் நாம் ஒன்றும் செய்யலாகாது.

சங்கீதக்காரன் சொல்லும்போது: "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்.119:105). ஆம், கர்த்தருடைய வசனம் நம்முடைய கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. இந்த வெளிச்சத்திலே நாம் வெளிச்சம் காண்கிறோம். இவைகளைப் பற்றிக் கொள்ளாத ஒருவன் இப்பூமியிலே இடறுவான். அது மாத்திரமல்ல அவனுடைய கால்கள் மரணத்தை நோக்கி தீவிரிக்கும். சமாதானமில்லாமல், நோயுற்று,அலைகிறவனாயிருப்பான். காயீன் பாவம் செய்தபோது கர்த்தர் அவனுக்கு இட்டதண்டனை இப்படிப்பட்டதாகத் தானிருந்தது. உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். தேவ சித்தத்திற்கும் அவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படியாதிருக்கும்போது இவ்விதமான சூழ்நிலைக்குள்ளாக தள்ளப்படுவோம்.

இந்த சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அநேகருக்கு கிடைப்பதில்லை. காரணம் என்னவென்றால்; "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"(2கொரி.4:2-4). இப்படி பிசாசு அவர்களை குருடாக்கிப் போட்டபடியால் மெய்யான சுவிசேஷத்தின் ஒளியை அவர்களால் பார்க்கமுடியவில்லை.

"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்ட வர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும்

நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"(1யோவா.1:5-7).

**வேதமே மனமகிழ்ச்சி:**

வேதம் நம்முடைய வாழ்க்கையில் மனமகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது. வேதாகமம் இருக்கிற இடத்திலே தேவன் இருப்பார். வேதாகமத்தை ஒதுக்குகிறவர்களும் வெறுக்கிறவர்களும் நாசமடைவார்கள். "மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத்தரும்; மனோதுக்கத்திலே ஆவி முறிந்துபோம்"(நீதி.15:13). மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைக் கொடுக்கிறது. ஒருவன் மனமகிழ்ச்சியாயிருக்க வேதாகமத்தை நாட வேண்டும். தாவீது சொல்லும்போது "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்"(சங்.119:92). துன்பங்களோ, பாடுகளோ, வரும்போது வேதாகமத்தை அநேகர் எடுத்து வாசிப்பதில்லை. அந்தவிதமான சமயத்திலே நாம் வேதாகமத்தை வாசிப்போமென்றால் மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். துன்பம் வரும் சமயத்தில் அநேகர் பொதுவாக நன்பர்களையும் உறவினர்களையும் நாடுவர். அது தவறு என்று சொல்லவில்லை. மனிதனை நம்புவதைவிட தேவன் பேரில் பற்றுதலாயிருப்பது நலம். சிலர் கஷ்டத்தைப் போக்க மாற்று மருந்தாக போதை வஸ்துக்களுக்கு அடிமைகளாகிவிடுகின்றனர். இது ஒரு நிரந்தர தீர்வை தரும் என நம்புகின்றனர். "மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும் முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்"(நீதி.23:31,32).

ஒருவனுடைய மகிழ்ச்சியைக் கெடுப்பது ஒருவகையில் அவனுக்கு வரும் உபத்திரவமும், இக்கட்டும், நெருக்கமும் எனலாம். கர்த்தரோ, இவைகள் எல்லாவற்றினின்றும் அவனை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். "உன் காலைத் தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார்"(சங்.121:3).மேலும், தாவீது சொல்வதைக் கவனியுங்கள்: "இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது; அனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி"(சங்.119:143). இப்படிப்பட்ட நம்பிக்கை இருக்குமானால் நமக்கு வரும் உபத்திரவங்களிலும் நம்முடைய மன மகிழ்ச்சியை யாரும் கெடுத்துவிட முடியாது. இதைக் குறித்து பவுல் குறிப்பிடுகையில்: "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ,பட்டையமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், நிகழ்காரியங்

களானாலும்,வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும்,வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்"(ரோம.8:36-39). கிறிஸ்துவானவர் நமக்காக தியாக பலியாக மரித்திருக்கும் போது அவருடைய அன்பையும், அவருக்குள் இருக்கும் மகிழ்ச்சியையும் ஒருவரும் ஒருக்காலும் நிச்சயமாக பிரிக்க இயலாது.

**வேதமே நேசம்**


"வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை"(சங்.119:165). இன்றைய நாட்களிலே எங்கு பார்த்தாலும் சமாதானமில்லை என்றே பேச்சு. நாட்டுக்கு நாடு சமாதானமில்லை, வீட்டுக்கு வீடு சமாதானமில்லை, கணவன் மனைவியிடையே சமாதானமில்லை. இப்படி பல வகையில் மனிதனுக்கு சமாதானமில்லை. இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? தேவன் மனிதனுக்கு கொடுத்த வேதாகமத்தை ஏற்றுக்கொள்ளாததே! "வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன் என்கிறார் தாவீது (சங்.119:113). வீணான காரியங்களை வெறுத்து வேதத்திற்கு முதலிடம் கொடுத்து வேதத்தை நேசிப்போம். வேதத்தை நேசிக்கிறவர்கள் ஒருநாளும் வீணாய் போவதில்லை. பலபுத்தகங்கள் படிப்பது உடலுக்கு இளைப்பு. ஆனால் வேதம் வாசிப்பதும் அதை நேசிப்பதும் ஆத்துமாவுக்கு ஔஷதம். அது தேவனை அறிகிற அறிவுக்கு நேரே நம்மை வழிநடத்தும். முடிவிலே நித்திய ஜீவனையும் கொடுக்கும்.

ஒவ்வொருவருக்கும் விருப்பம் வானளவில் இருக்கிறது. இந்த விருப்பத்தை நிறைவேற்ற ஒவ்வொருநாளும் மனிதன் படும் பிரயாசத்திற்கு முடிவில்லை. திருவசனத்தில் நம்முடைய வாஞ்சையை வைக்கும் போது எல்லையில்லா சமாதானம் பெற்று நித்தியமானவரோடு வாழும் பெரும் பாக்கியத்தை அருள் நாதர் இயேசுகிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொள்வோம்.

"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக்கண்டடைவார்கள் ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு. பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப்பார்க்கிலும் என் வருமானம் நல்லது. என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப் பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும் படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும் நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" (நீதி8:17-21) கர்த்தர் இத்தனை ஆசீர்வாதங் களையும் கொடுக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். நாம் அவரை சிநேகிப்போமானால் அவர் அருளிச்செய்த வேதாகமத்தில் வாஞ்சையாயிருப்போமாக!.

# இயேசுகிறிஸ்து
# JesusChrist

**J.C.Choate**



இயேசுகிறிஸ்துவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படியென்றால், அவரைக் குறித்து எவ்வளவு தூரம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்? அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறியதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா?நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகவும், அவருடைய சபையின் அங்கத்தினனாகவும் இருக்கிறீர்களா?

இயேசுகிறிஸ்து வாழ்ந்தார் என வேதாகமம் மட்டும் கூறவில்லை, ஆனால் வரலாறு முதற்கொண்டு இதை உண்மையென உறுதிப்படுத்துகிறது. நமது நாட்காட்டியும் கூட **B.C.** என்பது கிறிஸ்துவுக்கு முன் எனவும் **A.D.**என்பது கிறிஸ்துவுக்குப்பின் எனவும் அறிவிக்கிறது. இயேசு வாழ்ந்தார் என்பதும் தொடர்ந்து ஜீவித்து வரலாற்றை மாற்றுகிறார் என்பதும் உண்மையாகும். கலை, இசை, சட்டம், அறிவியல் மேலும் நம்முடைய ஒவ்வொரு கலாச்சாரமும் இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தினால் மாற்றம் அடைந்திருக்கிறது. இந்தக் காரியங்கள் கிறிஸ்து வாழ்ந்தார் என்ற உண்மைக்குச் சான்றுகளாக இருக்கின்றன.

தேவன் உலகத்தை சிருஷ்டித்தபோது ஆதியாகம புத்தகத்தில் முதன்முறையாக கிறிஸ்துவைக் குறித்து வாசிக்கின்றோம். மனிதனுடைய சிருஷ்டிப்பின் விஷயத்தில் "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்"(ஆதி.1:26,27). என வாசிக்கின்றோம். தேவன், "மனுஷனை உண்டாக்குவோமாக ..." என்று சொன்னதைக் கவனியுங்கள். படைப்பில் உடனிருந்த இன்னொரு நபர் யார்? அந்த நபர் கிறிஸ்துவே என வேதவாக்கியம் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறது. தேவன் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து மூலமாய் சிருஷ்டித்தார் (எபே.3:9) என புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். மீண்டும், பவுல் கிறிஸ்துவைக் குறித்துப் பேசி, "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்தி

லுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது"(கொலே1:16) என அறிவிக்கிறான். கிறிஸ்துவைப்பற்றி யோவான், "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:3) என்கிறான்.

வேதாகமத்தின் பழைய ஏற்பாடு முழுவதிலும், மீண்டும் மீண்டும் கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவர் கிறிஸ்து என்றும் இயேசு கிறிஸ்து என்றும் பேசப்படவில்லை, ஆனால் அவர் உறுதியாக ஒரே நபராக அடையாளப்படுத்தப்படுகிறார். உதாரணமாக, யாத்திராகமம்3:13,14-ல், "கர்த்தருடைய தூதன் மோசேக்கு எரிகின்ற ஒரு முட்செடியில் தரிசனமாகி, சொல்லுகையில், அவர் தேவனாக அடையாளப்படுத்தப்படுகிறார் மேலும் தம்மை **"இருக்கிறேன்"** என அழைக்கிறார். யோவான்8-ல், இயேசு அந்த நாமத்தை தமக்கே பயன்படுத்தினார். யாத்.32:34,மேலும் தொடந்து 33-ம் அதிகாரமும் கர்த்தர் இஸ்ரவேலருக்கு முன்பாக எகிப்திலிருந்து அவர்களுடைய பயணத்தில் என்னுடைய தூதனை அனுப்புவேன் என வாக்களிக்கின்றதைக் காட்டுகிறார். 1கொரி.10:1-4 இஸ்ரவேல ரோடே கூடச் சென்றவர் கன்மலையாகிய இயேசு கிறிஸ்து என அடையாளப்படுத்த படுகிறது, நியாயா.2:1, "எகிப்திலிருந்து உங்களை புறப்படப்பண்ணினவராகிய" அவர் "கர்த்தருடைய தூதன்" என அடையாளங் காட்டுகிறது. யாத்.14:19, நியாயா.13:6,9, 2சாமு.14:17,20, நியாயா2:1, ஏசாயா63:9, யாத்.2, ஏசாயா63:7-10 போன்ற வசனங்களைப் பாருங்கள்.

பழைய ஏற்பாட்டின் பல பகுதிகள் தேவனைக் குறித்து பேசுகின்றன, ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியின் தூண்டுதலினால் கிறிஸ்துவைக் குறிக்கின்றது, அவைகள்: ஏசா40:3, மத்.3:3, யோவா1:29, சங்.24:9,10, மற்றும் 1கொரி.2:8,யாக்.2:1, ஏரே.23:5, மேலும் 1கொரி.1:30, ஏசா.8:13,14, மேலும் 1பேது.2:7,8, சங்.110:1, அப்.2:34-36, மல்.3:1, லூக்.1:76, யோவா.1:30, யோவேல்2:32, 1கொரி.1:2, சங்.45:1,6,7, எபி.1:8, சங்.102:25-27, எபி.1:10, ஏசா.52:4, மற்றும் 1பேது.1:10 பேன்றவைகள் ஆகும்.

மத்தேயு1:18-25-ல் "இயேசு கிறிஸ்துவின் ஜெநநத்தின் விவரமானது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவன் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்தமனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டி

ருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்". இச்சம்பவத்தை நீங்கள் லூக்1 மற்றும் 2-ல் காணலாம்.

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும் அவருடைய ராஜ்யத்தைக் குறித்தும் பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன. தானியேல், "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்"(தானி2:44) என்றான். மத்தேயு3:1-3க்குச் செல்கையில், "அந்நாட்களில் யோவான்ஸ்நானகன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து, மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். **கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று**, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே" என்கிறான். கிறிஸ்து மத்.16:17,18-ல் அவர் தம்முடைய சபையை அல்லது ராஜ்யத்தைக் கட்டப்போவதாகச் சொன்னார் மேலும் கொலோ.1:13,14-ல் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் என்றான். தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டதும், என்றென்றும் நிலைத்திருக்கும்படி வரப்போகின்ற ராஜ்யமாகிய சபையைக் குறித்து

இங்கு பவுல் பேசுகின்றான்.

மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவானில் நாம் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி வாசிக்கையில், அவர் சோதிக்கப்பட்டார் ஆனால் அவர் ஒருபோதும் பாவஞ்செய்யவில்லை என அறிவுறுத்தப்படுகிறோம். அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி பல அற்புதங்களை நடப்பித்தார். அவர் வியாதியஸ்தரை குணமாக்கினார், பிசாசுகளை துரத்தினார், மரித்தோரை உயிர்ப்பித்தார். நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்து, "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்" (யோவா.3:2) என யோவான் கூறுகிறான்.

இயேசு ஒரு குற்றமற்ற ஜீவியம் ஜீவித்தபோதும் மனிதனை இரட்சிக்க வந்த போதும், அவருக்குப் பகைவர்கள் இருக்கத்தான் செய்தார்கள் அவரை விசுவாசியாதவர்களும் அவரிடம் பொறாமை கொண்டவர்களும் அங்கிருந்தார்கள். யூத மதத்தலைவர்களும் கூட அவரைப் புறக்கணித்தார்கள், ஏனென்றால் அவர் 'ராஜா' வம்சத்தை சேராதவர் என தங்கள் மனதில் எண்ணி அவரைப் பின்பற்றுகிறவர்களைக் குறித்து அவர்கள் பொறாமை கொண்டார்கள். இவையெல்லாமே மத்தேயு26-28-ல் எழுதப் பட்டுள்ளபடி அவருடைய சிலுவை மரணத்திற்கு இட்டுச்சென்றது. ஆனால் அவர் சிலுவையின் மேல் மரித்து அடக்கம் செய்யப்பட்டபோதிலும், அவர் வாக்களித்திருந்தபடியே கல்லறையி லிருந்து மூன்றாம் நாள் உயிரோடெழுப்பப்பட்டார். இது மத்தேயு26-28-லும் மேலும் மற்ற பல வேதாகமப் பகுதிகளிலும் எழுதப்பட்டுள்ளது. அதன்பிறகு சில நாட்கள் கழித்து அவர் ராஜாதிராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் அரசாளும்படி பிதாவினிடத்திற்கு பரலோகத்திற்கு ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (அப்.1:7-11).

ஆனால் இதுவே இந்த சங்கதியின் முடிவல்ல. இயேசு உலகத்தின் பாவங்களுக்காக மரித்திருக்கையில், இன்றும் கூட அவரிடத்தில் விசுவாசம் வைத்து அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கிறார் (யோவா.3:16,17: மாற்16:16, அப்.2:38,47). அவர் விசுவாசமுள்ளவர்களை, அவரோடுகூட என்றென்றும் அவர்கள் வாழப்போகின்ற பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல மறுபடியும் வரப்போவதாக வாக்களித் திருக்கிறார்(வெளி.222:14; வெளி.2:10).

நீங்கள் இவ்வுலகத்திலும் வரப்போகிற உலகத்திலும் இரட்சிக்கப்பட்டிருக்கும்படி கிறிஸ்துவைப் பற்றி வாசித்துக் கற்றுக்கொள்ளும்படிக்கும், அவரிடத்தில் விசுவாசம் கொள்ளும்படிக்கும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்டியும்படிக்கும் நீங்கள் உற்சாகப்படுத்தப்படுகிறீர்கள்.

# தேவன்? - God?
# அவருடைய சமூகம் நிலைத்திருத்தல்
# The Persistence of His Presence

பெண்கள் பகுதி

*-Betty Burton Choate*

நான் ஒரு மனுஷியாக இருக்கிறேன். எவ்வளவு முக்கியமானவள் நான்! என்னுடைய முழு உலகத்தின் மையம் நானே. நான் ஒவ்வொரு நபரையும் ஒவ்வொரு பொருளையும் எனக்கு உறவாயிருக்கின்றவர்களுடைய மற்றும் எனக்கு முக்கியமாயிருக்கின்றவற்றுடைய நோக்கு நிலையிலிருந்து பார்க்கின்றேன். நான் உண்மையுள்ளவள்; உண்மை என்னுடைய சொந்த நினைவுகள், உண்மை என்னுடைய சொந்த அனுபவங்கள்.

நான் ஒரு மனுஷியாக இருக்கிறேன். எவ்வளவு அற்பமானவள் நான்! நான் எத்திக்கிலும் எனக்கு முன் வானத்தைத் தொடும் பூமியின் எல்லைகளைக் காண்கிறேன். நான் மலைகளின் மிகப் பிரமாண்டமான உயரத்தினைக் காண்கிறேன். நான் தொடுவானத்தில் ஒளிவீசுகின்றதான கடலைக் காண்கிறேன். நான் இருண்ட வானங்களினுள் எட்டாத தூரத்திலிருக்கும் பரந்து விரிந்துள்ள விண்வெளியை என் கண்ணுக்கு எட்டியதூரம் வரை காண்கிறேன். எனக்கு முன் லட்சக்கணக்கானவைகள், உயிர்வாழ் வனவற்றோடு ஒப்பிடுகையில் என்னுடைய சிறுமையும் அற்பமுமானவற்றோடு, இந்த அண்டசராசரங்களை சிருஷ்டித்து நிலைநிறுத்திய இருக்கிறவரும் பயங்கரமானவருமான ஒருவருடைய அவசியத்துடன் என்னுடைய ஆன்மா தாக்கம் அடைந்திருக்கிறது.

எனக்குள் கட்டுக்கடங்காத விசாரங்கள் பெருகிறது, "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?......"(சங்.8:4).

**அவர் ஜீவிக்கிறவர் என்ற அவருடைய சமூகத்தை மறுப்பதற்கு மாறாக அவருக்காக மரிப்போம் என தேவனிடத்தில் ஆழமான விசுவாசமுள்ள மனுஷர் அநேகர் உண்டு.**

**சண்டையிட்டுக் கொண்டும் தீவிரமாக தேவன் இல்லையென அறிவித்துக்கொண்டும் அவருடைய மகிமையுள்ள நாமத்தினைத் தூஷிக்கிற மற்ற மனிதர்கள் உண்டு.**

ஆனால் தெளிவான உண்மை என்னவென்றால், ஒரு ஆத்துமாகூட தேவனுடைய முகத்தைக் கண்டிராதபோதும், ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு காலத்திலும், புவி வரலாற்றில் ஒவ்வொரு பெரிய நிகழ்வுகளிலும் அண்ட சராசரங்களில் வியாபித்திருக்கிறவராக இருக்கிறவர் அவர் ஒருவரே! என்றென்றும்

வாழ்ந்திராத ஒவ்வொரு ஆத்துமாவும் சந்திக்கவேண்டிருக்கிற அவருடைய சமூகம், ஒரு வினாவும் விடையுமாயிருக்கிறது. அந்த உண்மை, தனக்குள்ளாக, பிரமிக்கத்தக்கவகையில் நிரம்பியுள்ளது.

**ஆழமாய் இதனை சிந்தித்துப்பார்:** அனைத்துக் கலாச்சாரங்கள், மக்கள், சவால்கள், சந்தர்ப்பங்கள், விருப்பங்கள், ஆபத்துகள் மேலும் பயங்கள் இவற்றோடு இன்று வாழ்கின்ற கோடிக்கணக்கானோர் மத்தியில் - மற்றும் என்றென்றும் வாழ்கின்றவர்கள் மத்தியில் (சரீர ஜீவியத்திற்கு அவசியமானவற்றிற்கு அப்பால்): **தேவன் ஒருவர் உண்டா?** என்ற ஒரே ஒரு கேள்வி எல்லா மனிதருக்கும் பொதுவானதாக இருக்கிறது.

அவருடைய சமூகம் நிலைத்திருத்தல் என்பது அவர் உண்மையானவர் என மனிதர்களுடைய உள்ளங்களில் அவருடைய சமூகம் நிலைத்திருத்தல் என்பதே நிறைவான சான்றாயிருக்கிறது. புராதன மூட நம்பிக்கையின்படி அவர் ஒரு கற்பனைப் பொருளாக இருந்தாரானால், மனிதவர்க்கம் சிரித்திருக்கும் அல்லது பழங்காலமாக இருந்து வந்த மூட நம்பிக்கையினை சபித்திருக்கும்.

ஆனால் அவர் ஒவ்வொரு இருதயத்தின் வாசற்படியில் நிலைத்திருக்கிறார், வழி விலகிச்செல்ல மறுக்கிறவராக, அவருடைய உண்மைத்துவத்தைக் குறித்ததான கேள்வியோடு நாம் ஒவ்வொருவரும் போரிட்டு சமாளிக்க வேண்டுமென அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

### வேத அறிவுப்போட்டி எண் 50 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| V.கோவலன் | -மதுரை |
| K.பிரஜிதா | -ஈரோடு |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| G.கிரேஸ் ஜெயா | -வெள்ளகுளம் |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| S.தண்டபானி | -சிலுவத்தூர் |
| R.கலாவதிராஜா | -கொ.பாளை |
| G.ஜெபாஸ்டின் | -செ.பாளை |
| R.பிளசன் | -கன்னியாகுமரி |
| B.ஜெயராணி | -சேளூர் |
| D.ஏசுதாஸ் | -சித்தூர் |
| V.ரத்னா | -எம்.பாளை |
| N.கமலவேணி | -சென்னை |
| P.ஜெயபால் | -புதுக்கோட்டை |
| A.சேவியர்மேரி | -மதுரை |
| R.சாமுவேல் | -ஊதியூர் |
| T.வேலுச்சாமி | -ஜே.பாளை |
| J.சாமுவேல்ராஜன் | -மதுரை |
| Mr.ஆனந்த் | -நாகமலை |
| Sis.நேசமணிவேதநாயகம் | -மதுரை |
| D.பவுல் | -செ.பாளை |
| V.சாலமோன்பாக்கியராஜ் | -மதுரை |
| R.ஸ்வாதி | -ஈரோடு |
| G.மெர்சிரூபி | -கெடுவாய் |
| M.சேகர் | -மோதுபட்டி |
| P.கந்தசாமி | -கள்ளிமந்தை |
| K.சன்முகம் | -மோ.பாளை |
| S.பவுல்ராஜ் | -நவக்கானி |
| A.பிஜி | -செ.பாளை |
| A.ஜோதிகாந்தம் | -போடபாறை |
| P.சேகர் | -வெள்ளகோவில் |
| S.செல்வராஜ் | -வெள்ளகோவில் |
| Mrs.குளோரி பௌல்ஜர் | -சென்னை |
| K.தங்கவேல் | -மூலனூர் |
| K.சாந்தி | -வாடிப்பட்டி |

வேதாகம சபை
THE CHURCH OF THE BIBLE

பாடம் - 9

# சபையின் ஊழியம்
# WORK OF THE CHURCH

J.C.Choate

சபை ஏன் நிலைத்திருக்கிறது? அதன் நோக்கமென்ன? அதன் ஊழியம் என்ன? இதை அறிந்து கொள்ள, தேவனுடைய வசனத்திற்குச் செல்லுவோம்.

முதலாவதாக, சபையானது உலகப்பிரகாரமான வியாபாரத்தையோ, பள்ளிக்கூடம் மற்றும் மருத்துவமனை முதலியவற்றை நடத்துவதையோ செய்யக்கூடாது என்பதை அறியவேண்டும். பணத்தை சம்பாதிக்கின்ற ஒரு பதிப்பகமாகவோ, புத்தகங்களை விற்கின்ற ஸ்தாபனமாகவோ அது செயல்பட்டுவிடக்கூடாது. இவைகளெல்லாம் ஒருவேளை நல்லவைகளாயிருந்தாலும், தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் இதிலே தரித்திருப்பது சரியானதாக இருந்தாலும், இது சபையின் பணியல்ல. இப்படிப்பட்ட அலுவல்களை மார்க்க உலகம் அதிகமதிகமாய் கவனத்தைச் செலுத்தி, தேவன் வேதாகமத்தில் இவ்வாறாக தமது மக்களுக்காக வைத்த திட்டத்தின் நோக்கத்திலிருந்து வழுவி விலகிச்செல்லுகிறது.

தேவனுடைய வசனங்களாகிய பக்கங்களைத் திருப்பும்போது, சபையின் மூன்று வித ஊழியங்களைக் காண்கிறோம்: முறையே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், தேவையுடையோருக்கு உதவுதல், சபையை பக்தி விருத்தியடையச் செய்தல் என்பவைகள். அவைகளை ஒவ்வொன்றாக காண்போம்.

**1. சுவிசேஷத்தை பிரசங்கித்தல்:**

கிறிஸ்து உயிர்த்தெழுந்தவுடன், பரலோகத்திற்கு ஏறிப்போவதற்கு முன், தமது அப்போஸ்தலர்களிடம் போதித்ததாவது: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்றார். ஆமென்"(மத்.28:19,20). "பின்பு அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்

இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:15,16). பின்னதாக பவுல் வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு, "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்ரத பிரசங்கம் பண்ணு: எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்திசொல்லு" என்று புத்தி சொன்னான் (2தீமோ.4:2). பிற வசனங்களையும் குறிப்பிடலாம், ஆனால் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்ற கர்த்தருடைய அடிப்படை விருப்பத்தை மேற்குறித்த வசனங்கள் தெளிவாக்குகின்றன.

அப்போஸ்தலர்கள் காலத்தில் சபை என்ன செய்தது? கர்த்தர் தங்களை என்ன செய்யவேண்டும் என்று கேட்டாரோ அதையே செய்தனர். அவர்கள் வசனத்தை பிரசங்கித்தனர். உதாரணமாக அப்போஸ்தலர் நடபடிகள்புத்தகம் நிறைந்த உதாரணங்களை கொண்டுள்ளது. அனைத்து மனமாற்ற நிகழ்ச்சிகளிலும், கர்த்தருடைய சித்தத்தை பிரசங்கியார் போதித்தார் (அப்.2,8,9,10 மற்றும் 16-ம் அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள்). ஆனால் யாரெல்லாம் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தனர்? எருசலேமிலே கர்த்தருடைய ஜனங்கள் மீது பெரிய உபத்திரவம் வந்தபோது, "சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்" என்று வேதம் சொல்லுகிறது (அப்.8:4).

அடுத்ததாக, அவர்கள் என்னத்தைப் பிரசங்கித்தனர்? மறுபடியும் நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ள மனமாற்ற நிகழ்ச்சிகளை வாசித்து உங்களுக்கு நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ஆனால் சுருங்கச் சொல்லின், அவர்கள் கிறிஸ்துவின் தெய்வீகம், ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும், சபையின் முக்கியத்துவம் ஆகிய அனைத்தையும் போதித்தனர். பவுல் இதை சுருக்கமாகச் சொல்லும்போது, "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" என்றான் (1கொரி.1:18).

தமது வசனம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என கர்த்தர் கட்டளையிட்டிருப்பதோடு, பவுலும் தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் விசுவாசம் வருகிறது என்று கூறுகிறான் (ரோம.10:17). மீண்டும் கிறிஸ்து, "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா.8:32). மேலும், "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்வார்கள் அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்

கேள்விப்படுவார்கள்?" (ரோம.10:14). இவைகள் எல்லாவற்றையும் சுருங்கச் சொன்னால், மனிதன் (ஆன்மாவிலே) இழந்து போனவன் (ரோம.3:23; 6:23), ஆதலால் தேவனுடைய அன்பு பிரசங்கிக்கப்பட வேண்டும். (ரோம.1:16; மாற்கு16:15,16) தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களும், கீழ்ப்படியாதவர்களும் இழந்து போவார்கள். (2தெச.1:7-9) இப்படியாக தேவனுடைய வசனம் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

**2. தரித்திரருக்கு உதவுதல்:**

தேவையிலிருந்தவர்களைக் குறித்து சபையானது அக்கரை கொள்ளவும், தங்கள் திராணிக்குத்தக்க வகையில் உதவவும் கர்த்தருடைய வசனத்தில் நமக்கு எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்.2:45-ல், "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" என்று சொல்லப்படுகிறது. இது மனமுவந்து கொடுக்கப்பட்டது. மேலும் அப்போஸ்தலர் 6-ம் அதிகாரத்தில் கிரேக்க விதவைகள் அன்றாட விசாரணையில் சரியாக கவனிக்கப்படவில்லை என்பதைக் குறித்து கிரேக்கர்களுக்கும் எபிரேயர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை நாம் காண்கிறோம். ஆதலால் அப்போஸ்தலர்கள் ஏழு மனிதர்களை அவர்களுக்குள் நியமித்து, சபையின் இப்படிப்பட்ட காரியங்களை கவனித்துக் கொள்ளச் செய்தனர்.

பவுல் ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும் பொருட்டு எருசலேமுக்குச் செல்வதை நாம் வாசிக்கிறோம். அவர் தொடர்ந்து கூறும்போது, "இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ண எத்தனமாயிருக்கிறேன். மக்கெதோனியாவிலும், அகாயாவிலும் உள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங் கொண்டிருக்கிறார்கள்" என்றான்(ரோம.15:25,26) கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்கும் பவுல் எழுதும்போது, "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச்சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன்" என்றான்.

யாருக்கு உதவி செய்யப்பட வேண்டும்? இயல்பாகவே, சபையிலுள்ள தேவையிலிருப்போருக்கு முதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதாவது ஏழைகள், வயதானோர்

விதவைகள், அவசர கால தேவையிலிருப்போர் அனாதைகளான கிறிஸ்தவர்கள் போன்றோருக்குசெய்யப்பட வேண்டும். ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம் என்று வாசிக்கின்றோம் (கலா.6:10). ஆனால் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதில்லை. 1தீமோத்தேயு 5-ல் தனக்குத் தானே உதவி செய்து கொள்ள இயலாத ஒருவருக்கு உதவ வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லாத போதும், அந்த நபர் விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக தன்னை நிருபிக்க வேண்டும். ஆதலால் கர்த்தருடைய பணம் கேட்போருக்கெல்லாம் எடுத்துக் கொடுத்துக் கொண்டிராமல், வித்தியாசம் கண்டு கொடுக்கப்படவேண்டும்.

சபை அங்கத்தினர்களுக்கு மாத்திரம் உதவி செய்யாமல், சபையின் திராணிக்கேற்ப உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்கும் உதவ வேண்டும். (யாக்கோபு1:27 மற்றும் 2-ம் அதிகாரத்தையும் வாசிக்கவும்) சுவிசேஷத்தைக் கொண்டு ஜனங்களை அணுக இது ஒரு வாய்ப்பாக அமையும்.

இப்படிப்பட்ட ஊழியத்திற்கு நிதி உதவி எங்கிருந்துவரும்? அங்கத்தினர்கள் மனமுவந்து அளிக்கும் காணிக்கை மூலமே. (1கொரி.16:1; 2கொரி.9:6,7) அதாவது அங்கத்தினர்கள் கொடுக்கத்தவறினால், பிறகு சபை தேவையுடையோரின் துயர் துடைக்க உதவி செய்ய இயலாது.

**3. சபை பக்தி விருத்தியடைதல் வேண்டும்:**

பக்தி விருத்தி அடையச் செய்தல் என்றால், சபையைக் கட்டுவது, பெலப்படுத்துவது, உற்சாகப்படுத்துவது, அங்கத்தினர்களை ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையச் செய்வது என்று பொருள். பக்திவிருத்தியடையச் செய்கிற சில காரியங்கள் யாவை? தேவ வசனம், ஐக்கியம், ஆராதனையில் தரித்திருத்தல், ஒருவருக்கொருவர் உதவி செய்தல், நற்கிரியைகள் அன்பு போன்றவை. (அப்.9:31; ரோம.14:19; 1கொரி.8:1; 1தெச.5:11; 1கொரி.14:26; 2கொரி.12:19 மற்றும் எபே.4:12 ஆகியவற்றை வாசிக்கவும்).

முடிவுரையாக, உலகளாவிய அமைப்பை சபை பெறாமலும், மனித தலைமைத்துவம் இல்லாமலும், சபை இப்படிப்பட்ட பணிகளை எப்படி செயலாற்றக்கூடும் என அநேகர் ஆச்சரியப்படுகின்றனர். ஆனால் கர்த்தருடைய வழியே சிறந்த வழி. அவரது பணியைச் செய்ய உண்டாயிருக்கும் ஒரே வழி. நாம் அவருடைய பணியைச் செய்கையில், அவர்ஒருவருக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாயிருக்கும். இவ்வாறாக இங்கிருப்பதின்

நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறோம். கிறிஸ்து சபைக்கு தலையாகவும், ஒவ்வொரு பிராந்திய சபையும், அங்கத்தினரும் தமது பணிகளை செய்ய வேண்டும். எனவே அங்கத்தினர்கள் மனமுவந்து கொடுக்கும் காணிக்கையினாலே மாத்திரமே சபை தனது ஊழியத்தை செய்ய இயலும்.

பிரசங்கித்தலும், தேவையிலிருப்போருக்கு போதித்தலும், அதன் அங்கத்தினர்களை பக்தி விருத்தியடையச் செய்கிறதுமாகிய அனைத்து நோக்கங்களும், மனிதர்களின் ஆத்துமாக்களை இரட்சிக்கவும், இறுதியில் தேவனுடைய நாமம் துதிக்கப்படவுமேயாகும். அரசியலமைப்பும்; வியாபார அமைப்புகள் அனைத்தும், சமூக நல சேவைகளும், தேவனுடைய வசனத்திற்கு அப்பாற்பட்டது. கர்த்தருடைய சபை உலகில் இருந்தாலும் உலகத்திற்குரிய தாயிராமல், ஊழியம் செய்யவும், சுத்தமாயும் பரிசுத்தமாயும் நிலைத்திருக்கவும், அதன் அங்கத்தினர்கள் அனைவருக்கும் இரட்சிப்பு நிறைவேறவும் அதன் சிருஷ்டிகருக்கு மகிமையளிக்கவுமே விழைகிறது. இதுவே கர்த்தருடைய சபை, அதன் ஊழியம் அதன் பணி ஆகும்.

**கேள்விகள்**

தயவு செய்து சரியான பதில் கொடுக்கவும்:

1. கர்த்தருடைய சபை எப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடக் கூடாது?------------------------------------------------------------
2. மார்க்க உலகம், இலாபநோக்குடைய வித்தியாசப்பட்ட வியாபாரங்களில் ஈடுபடுவது குற்றமா?-----------------------------
3. சபையின் ஊழியம் (பணி) என்ன?-----------------------------------------
4. மத்.28 : 19இ 20-லும்இ மாற்கு 16 : 16- லும் வரும் கர்த்தருடைய கட்டளைகளைக் குறிப்பிடுக.----------------------------------------------
5. ஆதிக் கிறிஸ்தவர்கள் சிதறிப் போனபோது செய்தது என்ன?--- ------------------------------------------------------------------------
6. அவர்கள் பிரசங்கித்த சில காரியங்கள் யாவை?----------------------
7. விசுவாசம் எப்படி வருகிறது?------------------------------------------
8. எது விடுதலையாக்குகிறது?-----------------------------------------------
9. மனிதன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்?----------------------------
10. யார் இழந்து போனவர்களாய் இருப்பர்?------------------------------
11. தேவையிலிருப்போருக்கு உதவ சபை அக்கரை காட்ட வேண்டுமா?----------------------------------------------------------------
12. எருசலேமிலிருந்த ஏழை பரிசுத்தவான்களுக்கு யார் தர்மப் பணத்தைக் கொடுத்து உதவி செய்தது?-------------------------------
13. எல்லோருக்கும் உதவி செய்தல் அவசியமா?------------------------
14. எவ்வகை மக்கள் முதலில் உதவி பெற வேண்டும்?------------------

15. உதவி செய்தலில் உள்ள அளவீடு என்ன?------------------------

16. சபைக்கு புறம்பே இருப்போருக்கும் உதவ வேண்டுமா?----------

17. தேவையிலிருப்போருக்குச் செய்யும் நிதி உதவி எங்கிருந்து வரவேண்டும்?------------------------

18. எப்பொழுது பணஞ்சேர்க்குதல் நடைபெற வேண்டும்?----------

19. பக்தி விருத்தி எனும் பதத்தை விளக்குக?------------------------

20. பக்தி விருத்தியை உண்டுபண்ணுகிற சில காரியங்கள் யாவை?-

21. தேவனை எப்படி துதிக்கவும் கனப்படுத்தவும் இயலும்?----------

22. சபைக்குத் தலைவர் யார்?------------------------

23. சபையாற்றும் பணியின் நோக்கமென்ன?------------------------

24. சபை உலகிற்குரியதா?------------------------

25. அரசியல், வியாபாரம் இவற்றை சபை செய்வது எதற்கு அப்பாற்பட்டது?------------------------

*ஜெபியுங்கள்*

- புதுவருட ஸ்தோத்திர கூட்டங்களுக்காக...
- மரித்துப்போன வாசகர், அகஸ்டின் குடும்ப ஆறுதலுக்காக...
- இந்திய தேசத்தில் சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட...

## பொது அறிவுச் சோதனை

1. தமிழ் நாட்டின் தற்போதைய கவர்னர் யார்?
   அ)ராம்மோகன்ராவ் ஆ)என்.டி.திவாரி இ)எஸ்.எஸ்.பர்னாலா
2. யானைகவுளி இருப்பது இலங்கையில். யானைக்கு குகைகள் எங்கே உள்ளது?
   அ)ஒரிசா ஆ)மகாராஷ்டிரா இ)கேரளா
3. 'மார்ச்' என்னும் ஆறுபாயும் நாடு எது?
   அ)செக்குடியரசு ஆ)பிரான்ஸ் இ)டென்மார்க்
4. மனித உடலில் சிறு நீரகத்தில் கல்போன்று படிந்துள்ள பொருள் யாது?
   அ)பொட்டாசியம் ஆக்சலேட் (ஆ)ஆக்ஸாலிக் அமிலம் இ)கால்சியம் ஆக்சலேட்
5. சுத்த சமரச சன் மார்க்க சங்கத்தை நிறுவியவர் யார்?
   அ)நாராயணகுரு (ஆ)ராமலிங் அடிகளார் (இ)வைகுண்ட சுவாமி

விடைகள்:1. எஸ்.எஸ்.பர்னாலா 2. மகாராஷ்டிரா 3. செக்குடியரசு 4. கால்சியம் ஆக்சலேட் 5. ராமலிங் அடிகளார்

# சாகிறவனுடைய சாவை கர்த்தர் விரும்புகிறதில்லை
# The Lord has no pleasure in the death of him that dieth

*"மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்: சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்"(எசே.18:32)*



உலகத்தில் ஒவ்வொரு 40 நொடிக்கும் யாரோ ஒருவர் ஏதோ ஒரு இடத்தில் தன்னை தற்கொலை செய்து கொள்கிறார். காரணம்! ஏமாற்றம், தோல்வி, கஷ்டம், வியாதி, மனவேதனை இப்படி ஏதோ ஒன்று அவர்களுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டு அவர்களை சாவுக்கு இழுத்துச்செல்கிறது.

பாடுகள் மனிதனுக்கு பல வழிகளில் வருகிறது. இதிலெல்லாம் வெற்றி கண்டவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவர் நம்மைப் போல பாடுகளுள்ள மனுஷனாக பூமியில் அவதரித்தார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும், மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"(பிலி.2:6-11). இவ்விதமாக நம்மை ஒப்புக்கொடுப்போமானால், இவ்வுலகத்தில் உள்ள பாடுகள், பிரச்சனைகளிலிருந்தும் நம்மை கர்த்தர் விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

"ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்"(எபி.2:18). சமீபத்தில் ரேடியோ நிகழ்ச்சி ஒன்றில் பார்வையற்ற ஒருவர் செய்திகொடுத்ததைக் கேட்டேன். அவர் கண்பார்வையில்லாதது ஒரு குறைபாடே இல்லை என்றும் தன்னைவிட மிகமோசமான நிலையிலிருந்து மனந்திரும்பிய ஒரு பெண்மணியைப்பற்றியும் சொல்லக்கேட்டேன். அந்த பெண்மணியாரென்றால் ஜான்வெய்கிடாடா என்பவள். அவள் தேவனை அறியாதகாலத்தில் ஒரு விபத்தினால் தலைக்கு கீழ்உள்ள அனைத்து பாகமும் செயல்படாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டாள்.

இதனால் அவள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் போகவே தன்னை விச ஊசி போட்டு கொன்று விடுங்கள் என்றாள். மேலும் வரும் நர்சிடம் எனக்கு தூக்கமாத்திரை கொடுங்கள் நான் சாகிறேன் என்பாளாம். இப்படி தன்னை தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தும் முடியவில்லை. அப்படிப்பட்ட சமயத்தில் ஒரு ஊழிய பெண்மணி அவளை சந்தித்து ஆண்டவர் இயேசுவைப்பற்றியும் அவர் நமக்காக சிலுவையில் மரித்த செய்திபற்றியும் அவளுக்கு எடுத்துச்சொல்லவே அவள் தன் போக்கை மாற்றிக்கொண்டு நான் கர்த்தருக்காக வாழ்வேன் என தீர்மானித்து தலைக்கு கீழுள்ள உறுப்புகள் செயல்படாத சூழ்நிலையில் இருந்தும், தன் வாயைப் பயன்படுத்தி 30க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறாள் என்றார் கண்பார்வை இல்லாதா அந்த பிரசங்கியார். இச்செய்திகேட்ட நான் மெய்சிலிர்த்துப்போனேன். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும், என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" (மத்.28-30) என்கிறார்.

நாம் துக்கப்படும்போதும், மனவேதனைப்படும்போதும் அதை யாரிடமாவது சொல்ல முயற்சிக்கிறோம். ஏனென்றால் நாம் மற்றவர்களோடு அதை பகிர்ந்துகொள்ளும்போது மனபாரம் சற்று குறையும் என கருதுகிறோம். இதை மனிதர்களிடம் சொன்னால் நமக்கு மனபாரம் குறைந்ததுபோல இருக்கும். ஆனால் மனபாரம் குறைந்தபாடில்லை. வியாதிக்கு மருத்துவரை நாடுகிறோம். ஏதோ ஒரு மருத்துவரை நாடுவதில்லை. அதற்குரிய ஸ்பெஷலிஸ்ட் டாக்டரை நாடுகிறோம். அதைப்போல ஆவிக்குரிய வைத்தியர் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. அவரே நம்முடைய பரமவைத்தியராக இருக்கிறார். அவரிடம் நம்முடைய மனபாரங்களை விட்டு விடும்போது அவர் இளைப்பாறுதல் தருவார். பின்பு அவரிடத்தில் கற்றுக் கொள்ளவேண்டும். அநேகர் அவரிடத்தில் வருகிறார்கள். அவருடைய இரத்தம் பாவங்களை கழுவும் என நம்புகிறார்கள். மேலும் அவர் மூலமே இரட்சிக்கப்பட முடியும் என்பதையும் ஒத்துக்கொள் கிறார்கள். ஆனால் அவருடைய வசனத்தின் படி நடக்க மறுக்கிறார்கள். இப்படியிருந்தால் நாம் மெய்யான இளைப்பாறுதலை பெற்றுக்கொள்ளமுடியாது. "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" (யோவான்8:31) என்றார். உங்களுடைய முடிவை மாற்றிக்கொண்டு இயேசுவுக்கு சீஷராக மாறுங்கள்.

# எது அறிவுடைமை?
# WHICH IS RATIONALITY?

இறைவன் முழுமுதற்கடவுள். அவர் இருக்கிறார் **(God Exists).** அவர் படைத்தார் **(God Created).** அவரும் நிலைத்திருக்கிறார், படைப்பும் நிலைத்திருக்கிறது. **(God and creation exist).** மேற்கூறிய சித்தாந்தம், அறிவுக்கேற்றதா? **(Rational thinking).**"அறிவு, அறியப்படுவதால் வருவது! அறியாமை, அஞ்ஞானத்தால் நிறைந்தது".



கண்களைத் திறந்தால் வெளிச்சத்தைக் காணலாம்.
காதுகளைத் திறந்தால் ஒலியினைக் கேட்கலாம்.
நாவினைத் திறந்தால் சுவையினை அறியலாம்.
மனதினைத் திறந்தால் இறைவனை அறியலாம்!
மனது மூன்று அடுக்குகளால் ஆனது.
1. ஆவி **(Spirit)** 2. ஆத்துமா **(Soul)**
3. அவற்றின் வெளிப்புறமான உடல் **(Body)**

**1. தேவன் ஒருவர் உண்டு என்பது அறிவுக்கேற்றது!**

சங்கீதம்14:1 - தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை.

சங்கீதம்19:1 - வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியை அறிவிக்கிறது.

ரோமர்1:20 - எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற் கொண்டு, தெளிவாய்க்காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.

**2. தேவன் எல்லாவற்றையும் படைத்தார் என்பதுஅறிவுக்கேற்றது!**

சங்கீதம்139:14 - நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத்துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

ஆதியாகமம்1:26 - பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

அப்போஸ்தலர்14:15 - மனுஷரே, ஏன் இப்படிச்செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணாண தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்.

**3. தேவன் தமது வார்த்தையை மனுஷருக்கு வெளிப் படுத்தினார் என்பது அறிவுக்கேற்றது!**

2தீமோத்தேயு3:16,17 - வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

ரோமர்10:17 - ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

எபிரெயர்1:2 - இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

**4. தேவன் மனிதனில் அன்புகூருகிறார் என்பது அறிவுக்கேற்றது!**

ஆதியாகமம்1:31 - அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

1யோவான்3:16 - அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

1கொரிந்தியர்15:3,4 - நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து.... .

**5. தேவன் தமக்கு மனிதன் கீழ்ப்படிய வேண்டுமென்று எதிர்பார்ப்பது அறிவுக்கேற்றது!**

எபிரெயர்11:6 - விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

எபிரெயர்5:9 - தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, ... .

யாக்கோபு2:20 - வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?

**6. தேவன் மனிதனை நியாயந்தீர்ப்பார் என்பது அறிவுக்கேற்றது!**

ரோமர்14:12 - ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.

2கொரிந்தியர்5:10 - ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.

பிரசங்கி12:14 - ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

**-Selected (இறையியல் இலக்கண) நன்றி.**

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

உரையாடல் - 28

*தாவீது:* என்னப்பா யோனத்தான் ரெம்ப அமைதியா உட்கார்ந்திருக்கே! வழக்கமா ஏதாவது கேள்வி கேட்பியே, இன்னைக்கு ஏன் மௌனம்?

யோனத்தான்: நீ தான் எந்தக் கேள்வியக் கேட்டாலும் வேதவசனத்தோட பளிச்சினு பதில் சொல்லிடறியே, நான் கேள்வி கேட்கிறதே வேஸ்ட். அதனால நீயே எல்லா விளக்கத்தையும் சொல்லிடு.

தாவீது: அப்படியில்லை யோனத்தான். நீ கேட்கிற கேள்விகள் பலருடைய மனசிலயும் இருக்கும் இல்லையா? நாம் வேத வசனத்தின்படி விளக்கம் கொடுக்கும் போது உண்மையான சத்தியம் எதுன்னு அவங்க புரிஞ்சுக்குவாங்க இல்லையா?

யோனத்தான்: சரி. அப்படீனா நான் தொடர்ந்து கேள்விகள் கேட்கிறேன். இசைக்கருவிகளை ஆராதனையில் உபயோகிப்பதைப் பத்தி பேசிக்கிட்டுருந்தோமில்லையா, அதுல பெரிய தவறு இருக்கிற மாதிரி தெரியலையே!

தாவீது: நாம் ஏற்கனவே பலமுறை பார்த்தபடி வேத வசனங்களோடு ஒன்றையும் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது இல்லையா? எழுதப் பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம் என்றும் (1கொரி.4:6) அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். 1தெச.4:1,2 அடிப்படையில் புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும்போது, இசைக் கருவிகளை உபயோகித்து பாடச் சொல்லி எங்கும் கட்டளையிடப்படவில்லை. அல்லது அப்போஸ் தலர்களும், ஆதிக்கிறிஸ்தவர்களும் அப்படிச் செய்ததாகவும் பார்க்க முடியவில்லை. எனவே தான் வேதம் சொல்லாத ஒன்றை நாம் செய்வதில்லை.

யோனத்தான்: வேதாகமம் இந்த விஷயத்திலே மௌனமாக இருப்பதற்கு ஏதாவது குறிப்பிட்ட நோக்கம் இருக்கிறதா?

தாவீது: நோக்கம் இருக்கும் என்றுதான் நான் நினைக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் மிகவும்

ஞானமாக புதிய ஏற்பாட்டில் பேசியிருக்கிறார். எது அவசியமோ அதை தீவிரமாக வலியுறுத்தியிருக்கிறார். எது அவசியமில்லையோ அதை தவிர்த்திருக்கிறார். ஆராதனையின் அத்தனை பலிகளும் இருதயத்திலிருந்தே செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. **பாடல்** எபே.5:19, கொலோ.3:16, **வசனம்** அப்2:37; 16:14, **திருவிருந்து** 1கொரி.11:28, **காணிக்கை** 2கொரி9:7, **ஜெபம்** எபே.6:18. எனவே புறம்பான அலங்கரிப்பாக எதையும் அவர் விரும்பவில்லை. இசைக்கருவிகள் பாடலுக்கு ஒரு புறம்பான அலங்கார மல்லவா!

யோனத்தான்: சரி. நேரடியாக எங்காவது இசைக்கருவிகளை வேண்டாம் என்று தேவன் சொல்லியிருக்கிறாரா?

தாவீது: சொல்லியிருக்கிறார். அது எங்கே என்பதை நமது அடுத்த சந்திப்பில் சொல்கிறேன்.

(மீண்டும் சந்திப்போம்)

## பேசும் வேதாகமம் : 1

1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)
6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)

சிறுவர் பகுதி

# நற்செய்தி
# Good News

*வேதபகுதி: லூக்கா 2:1-20*



நற்செய்தி என்றாலே எல்லோருக்கும் சந்தோஷந்தானே, ஆம் எல்லோருக்கும் சந்தோஷம் தான். இன்றைக்கு நான் சொல்லப்போகிற நற்செய்தி உலகத்திற்கு அறிவிக்கப்பட்ட உன்னதமான நற்செய்தி. அது எப்பொழுது என்றுதானே கேட்கிறீர்கள். இயேசுகிறிஸ்து பிறப்பின் போது தேவதூதனாலே மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி. பிரதர் அந்த நற்செய்தியை கொஞ்சம் சொல்லுங்க என்கிறீர்கள் அப்படித் தானே இதோ சொல்லத்தானே இங்கே வந்திருக்கிறேன்.

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அப்பொழுது யோசேப்பு தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். எப்படியிருந்திருக்கும் இல்லையா? கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோஎல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே

பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தநேரமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்தாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய்வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனைபண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.

இயேசுவின் பிறப்பு மனிதர்களாகிய நம் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்ற ஒரு பெரிய நற்செய்தியே. இந்த நற்செய்தியை தேவதூதர் முதலாவது மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். அந்தநேரத்தில் பரம சேனையின் திரள் அந்த தேவ தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனை துதித்தார்கள். மேய்ப்பர்களும் சென்று தங்களுக்கு சொல்லப்பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற்றிக்காகவும் தேவனை மகிமைப்படுத்தி துதித்துக்கொண்டு திரும்பினார்கள். 2000 ஆண்டுகளுக்கு பின்னால் இருக்கிற நமக்கும் அது நற்செய்தியே. அவர் மனுஷனாக பிறந்து நமக்காக மரித்ததினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. நாமும் அவர் மூலமாய் இரட்சிக்கப்படுகிறோம்.

**மனப்பாட வசனம்**

"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவளுக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்"(மத்.1:21)

# வேத அறிவுப் போட்டி எண்.52

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். <u>உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும். விடைகளை ஆங்கிலத்தில் எழுதுபவர்களுடைய பெயர் நீக்கப்படும்.</u>*

1. யார் தன் தலைமயிர் தனக்குப்பாரமாயிருப்பதினால் வருஷாந்தரம் சிரைத்துக்கொள்ளுவான்?
2. முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கு நீர் மூன்று நாள்வரைக்கும் எதைப்பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்?
3. களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப்போகப்பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும் என்று ஜெபித்தவன் யார்?
4. என்னைப்போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? என்றவன் யார்?
5. கொரிந்து பட்டணத்திலே தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனான ஜெபஆலயத்தலைவன் யார்?
6. வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்திசொன்னபின்பு அவனை விட்டு என்ன செய்?
7. கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பை எவ்விதமாய் அறிவியுங்கள்?
8. அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும் என்று யார், யாருக்கு எழுதுவது?
9. கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு எவ்விதம், அக்கிரமக்காரருக்கோ எப்படி?
10. பரிசுத்த மாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறவர் யர்ர்?

## நடப்புச் செய்திகள்

- கேரளாவில் ரேஷன் கடைகளில் பிப்ரவரி மாதத்தில் இருந்து அத்தியாவசியப்பொருட்கள் பாக்கெட்டுகளில் வினியோகம் செய்யப்பட உள்ளது.
- ஐக்கோர்ட்டு புதிய தலைமை நீதிபதியாக மார்க்கண்டே கட்ஜீ அவர்கள் பதவி ஏற்றுக்கொண்டார்.
- யூ.டி.ஐ.வங்கி, ஏ.டி.எம். மையங்களை அமைப்பது தொடர்பாக இந்திய தபால் துறையுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது.
- இந்தியாவின் உள்நாட்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை 1.46 கோடியிலிருந்து 1.85 கோடியாக அதிகரித்துள்ளது.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Dec. 2004.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க**
**அன்புடன் அழைக்கிறோம்.**

**கிறிஸ்துவின் சபை**

7.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: 04543-263278 செல்: 9443558041
E-mail:thewordofchrist@sansarnet.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்

**The Master Course**

தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.30/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்



**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box.5, BATLAGUNDU - 624 202
S.INDIA

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202
S. India